அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு ஆவணி - புரட்டாசி செப்டம்பர் 2017 முரசு 11 ஒலி 123



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரின்

## 195–ஆம் ஆண்டு

## வருவிக்கவுற்ற தின விழா அழைப்பிதழ்

அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே.



அவதார புருடரென்றும் யுக புருடரென்றும் சன்மார்க்க அறிஞர்களால் போற்றப்பட்டவரும் துதிக்கப்பட்டவரும் ஒப்பாரும் மிக்காருமின்றி ஓதாது உணர்ந்தவரும் இறைவனால் வருவிக்கவுற்றவருமாகிய திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரின் 195 ஆவது வருவிக்கவுற்ற தின விழா.

**நாள்: 05.10.2017, வியாழக்கிழமை,**

**இடம்: சத்திய ஞானசபை, வடலூர் பெருவெளி**

"எல்லோர்க்கும் தாய், தந்தை, அண்ணன், தம்பி முதலான ஆப்தர்களால் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்கு கோடி கோடி பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான இடம் இந்த இடம். இது சத்தியம் சத்தியம். இஃது ஆண்டவர் கட்டளை!"

அனைவரும் வருக! குருவருளையும் திருவருளையும் பெருக!!

# இறைப்புகஇயல்

*என்னுடைய விண்ணப்பம் அதுகேட்க எம்பெருமான்*
*நின்னுடைய பெருங்கருணை நிதிஉடையேன் ஆதலினால்*
*பொன்னுடையான் அயன்முதலாம் புங்கவரை வியவேன்என்*
*தன்னுடைய செயல்எல்லாம் தம்பிரான் செயல் அன்றே!*

*ஈண்டு நம்பிரான் ஆகிய வள்ளற்பெருமான், தம்பிரான் ஆகிய ஒருவரை மட்டும் வழிபட்டு உய்வு பெற வேண்டுமென வழிகாட்டுகின்றார். ஏனெனில், அவனே அனைத்திற்கும் ஆதிமூலம்; சர்வ காரணன் சர்வேச்சுரன்; இவ்வுண்மையைத் திருவடிப்புகழ்ச்சி...*

**சர்வகாரணன்விறற் காலகா லன்சர்வ**
**சம்பிரமன் சர்வேச்சுரன்**
**தகைகொள்பர மேச்சுரன் சிவபிரான் எம்பிரான்**
**தம்பிரான் செம்பொற்பதம்.**

*தம்பிரான் என்றால் தமக்குத் தாமே தலைமையவன் ஆன, தற்பரன் எனப்பொருள்படும்; சிவ சப்தத்திற்கு நன்மை, தூய்மை, மங்கலம், வீடு என்னும் பல பொருள் உள்ளன. பிரியாதவன் பிரான் என மருவியது;* **மங்கலத்தில் தங்குபவர்; வீடுபேற்றின் சொரூபமாக விளங்குபவர்; அப்பெருமானைச் சிவபிரான், எம்பிரான், தம்பிரான் செம்பொற்பதம் எனக் கொஞ்சிக் குலவுகிறது ஒரு குரல்.** *பர என்னும் பகுதி மகத்துவம் எனும் பொருளது. எனவே திருவடிப்புகழ்ச்சியில் பரசிவம் எனத்தொடங்கி முப்பத்திரண்டு அடிகள் வரை பர எனும் பகுதித்தாங்கி நின்றுத் திருவடிப் பெருமைகளைப் புகழ்ந்து, அதன் மகத்துவத்தைப் புகழ்ந்து உரைத்துப் போற்றுகின்றது. அப்படி இப்படிச் சொல்லாமல், அது இது எது என மயங்காமல், தப்படி ஒன்றும் இல்லாமல், செப்படி வித்தைக் காட்டாமல், உள்ளதாய், என்றும் உள்ளதாய், என்னுள் உள்ளதாய், எங்கும் உள்ளதாய் என்றன் உயிர், உளம், உடம்புடன் எதிலும் உள்ளதாய், மாற்றம் இல்லாதாய், எதையும் மாற்றும் வல்லதாய், உள்ள செம்பொருள் ஒன்றதே! அப்பொருள் மெய்ப்பொருள் என்பதே! கன்றல் கதறல் கசிந்துருகல்! நின்றல் நினைத்தல் நினைந்துருகல்! ஒன்றல் உணர்தல் உயிர்த்தறிதல் இவ்வுணர்வு மேலோங்கியதால்,*

**அருட்பெருஞ் ஜோதிஎன் அகத்தின் ஓங்கின**
**மருட்பெரும் திரைஎலாம் மடிந்து நீங்கின**
**இருட்பெரு மலமுதல் யாவும் தீர்ந்தன**
**தெருட்பெரும் சித்திகள் சேர்ந்த என்னையே – 5400.**

*ஆகா எத்துணை அற்புதம். மலங்கள் தீர்ந்து, திரைகள் நீங்கி, பேரொளி ஓங்கி, சித்திகள் சேர்ந்தன என்பது அற்புதம் அற்புதமே. இஃது நமது வள்ளற்பெருமானார் சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருநெறி பிடித்து ஒழுகலினால் பெற்ற பேருக்கு அரிய பெருவாழ்வு. இம்மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திட நமக்கும் அவா எழுகிறது. அது அடியவர்கள் உள்ளத்தினுள்ளே ஊடுருவி விட்டது என்பது உண்மையே. பெருவாழ்வு பெற்று நீடுவாழவேண்டும் என்ற நாட்டமுடன் புனித பூமியாம் வடலூர் உத்தரஞான சிதம்பரத்தை நாடிக் கூடுகின்ற கூட்டம் இன்று எண்ணில் அடங்கா. ஏனிந்த கூட்டம்?*

**ஓவுறாத் துயர்செயும் உடம்பு*தான்* என்றும்**
**சாவுறாது இன்பமே சார்ந்து வாழலாம்**
**மாவுறாச் சுத்தசன் மார்க்க நன்னெறி**
**மேவுறார் தங்களை விடுக நெஞ்சமே – 5401**

*இவ்வுடல் பெற்ற பயனால் எத்தனைக் கன்மங்கள்? அத்தனைக் கன்ம வினைகளால் அடைந்த துயரங்கள் எத்தனை! எத்தனை! என்றாலும் சாவுறாது இன்பமே சார்ந்து வாழலாம்; ஆனால் பெருமை பெறு சுத்த சன்மார்க்க நன்னெறியாகிய பெருநெறி பிடித்து ஒழுகாதவர்தம்மை விட்டு விலகி விடுக என நெஞ்சகத்திற்கு வஞ்சமின்றி அறிவுறுத்துகின்றார்.*

*அறிவுறுத்துகின்றவரே இறை பரம்பொருளை அடைக்கலம் புகும் இயலினை இயம்புகின்றதை கண்ணுறுவோம்.*

*சிவ பரம்பொருளை அனுபவித்தற்கு முக்கியம் ஜீவகாருண்யம், பாசவைராகம், சிவபத்தி. இவை கிடைத்தற்கு முதற் கருவி சாதுக்கள் சார்பு. ஆகலின் அவசியம் சாதுக்கள் சார்பு வேண்டும். எனவே வஞ்சமறு நெஞ்சில், மஞ்சுற விளங்கும் திருவடியைப் பற்றி நிற்கும் மெய் அடியவர்தம் அடியைப்பற்றிப் போற்றிப் புகழ்ந்து வழிபடுவோம்; பெரிய தொண்டரொடு கூடிடுவோம்; மேலும், சாதுக்கள் சார்பு, தற்காலத்திற் கிடைப்பினுங் கிடையாவிடினும் நம்மை எழுபிறப்பென்னும் பெருங்கடலைக் கடைப்பித்துப் பேரின்பமென்னும் கரையிலேற்றும் சுத்த சன்மார்க்கப் பதியிற்தெய்வப் புணையாக வாய்த்த அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரத்தை இடைவிடாது சிந்தித்துக் கொண்டும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவடிகளைப் பாவித்துக் கொண்டும் வருவது முக்கியத்தினும் முக்கியம். ஆகலில் நமக்கு இது அவசியம் பற்ற வேண்டிய காரியம். ஒன்றானவனை, உலகத்து உயிர்கள் அனைத்திலும் நின்றானவனை, பேரொளியானவனை, நிலையானவனை நினைந்து நினைந்து, அபயம் அபயம் என*

*அடைக்கலம் புகுந்திடுவோம். நாம் நலம் பெறவும், உள்ளம் ஞானவளம் பெறவும், இவ்வுடலுடன் உயிர் நிலைபெறவும் வேண்டி அடைக்கலம், அடைக்கலம் அடைக்கலம் என்று அடைக்கலம் புகுந்திடுவோம். புகுந்தருணம் இதுவே.*

**புகுந்தருணம் இதுகண்டீர் நம்மவரே நான்தான்**
**புகல்கின்றேன் என்மொழி ஓர் பொய் மொழிஎன் னாதீர்**
**உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்**
**உடைமைகளும் உலகியலும் உற்றதுணை அன்றே**
**மிகுந்தசுவைக் கரும்பே செங்கனியே கோற் றேனே**
**மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியா மணியே**
**தகுந்ததனிப் பெரும்பதியே தயாநிதியே கதியே**
**சத்தியமே என்றுரைமின் பத்தியொடு பணிந்தே. – 5577.**

*சத்தியம் உரைத்துப் பத்திசெய்யச் சொல்கிறார்.*

*உற்றவரும், பெற்றவரும், பிறரும், உடமைகளும், உலகியலும், உன்னைக் காப்பாற்றாது. உற்றதுணை செய்வது விலை அறியாமாமணியான சத்தியப் பொருள் ஒன்றே. அது ஒன்றே நமது பயத்தைப் போக்கி அபயம் அளித்தருளும். களங்கம் அற்ற மெய்ப்பொருள் அது. அது ஒன்றுமட்டுமே கைவிடாது காப்பாற்றும். எனவே களங்கம் அற்றவர்களால் மட்டுமே அதனைக் காண இயலும். இறைவனை அடைவதற்கு, அவன் அருளைப்பெற்று இறைநிலை அடைவதற்கு, நான்கு வேதங்களைப் படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை; ஆனால் பெருமானார் காட்டுகின்ற நான்கு ஒழுக்க நெறிகளை மட்டும் பின்பற்றி நடந்தாலே இறைநிலை கிட்டுவது சத்தியம்; நான்கு ஒழுக்கங்களை மறந்து நான்கு வேதங்களை ஓதினாலும் இறைநிலை எட்டுவது சாத்தியம் இல்லை. ஒழுக்கம் உயர்வு தரும்; ஒழுக்கம் விழுப்பம் தரும்; ஒழுக்கம்தான் உற்றுதுணை நிற்கும்.*

**அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு – 135 (திருக்குறள்)**

*இஃது ஆன்ம சாதனை; இதில் அந்தக்கரணப் போராட்டம், ஆக்கை நான் என்னும் மாறாட்டம், குலம் பற்றிய கோலாட்டம் ஆகியவை ஒருங்கே வாலாட்டம் காட்டாது ஒருங்க வேண்டும்.*


*மனம் போல் வாழ்வு என்பது அனுபவம்; மன நலமே மறுமை இன்பத்திற்கு ஆதாரம் என்பது உலகப்பொதுமறை திருக்குறளின் தெளிவு.*

*நீ மெய்விடாது இருந்தால் அவன் கைவிடமாட்டான். கரவு தவிர்ந்தது; அச்சம் தவிர்த்தான்; நாதமுடியான் என் அறிவாகி தெள்ளமுதனான்; எல்லாம் செயவல்லான் என் உயிர்காத்து இறவாமை*


*ஈந்தான். தூக்கம் தவிர்த்துப்பொன்னடி ஈந்தவன், தன்னிகர் இல்லாத் தலைவன், கருணா நிதியான், பொன்னியல் வண்ணன், அருளுடை அப்பன், ஆனந்த நாதன், தானந்தம் இல்லாத் தத்துவச்சோதி, சிற்சபை அப்பன், எல்லாம் செய்வல்லான் எல்லார்க்கும் நல்லான், அருள் நாடகத்தான் பொது நடம்புரிவான், கடவுள் அவனே; அவனே தலைவன், அம்பலச் சோதி; கனக சபையான் பொன்னம்பலத்தான்; அம்பலவாணன் ஏம சபையான், ஞான சபையான், சிற்றம்பலத்தான், எல்லாம் உடையான் எல்லாமும் ஆனான், பொய்விட்டு அகன்றால் புண்ணியன் ஆக்குவான்; மெய் தொட்டுநின்றால் மேல்வெளி காட்டுவான்; தூக்கம் தொலைத்து ஏக்கம் கெடுப்பான், இன்னல் அறுத்து இன்பம் கொடுப்பான்; செந்நிலை தந்து நான் அவன் ஆகும் சுத்த சன்மார்க்க சத்தியப் பெருநெறி பிடித்து ஒழுகினால், நீடு வாழ்க என நித்தியன் ஆக்கி சத்தியன் ஆக்கி, உத்தமன் ஆக்கி ஓங்கிடச் செய்வான்.*

**'தேகோகம்'** *என்று பாவியாமல்* **'சிவோகம்'** *எனபாவித்துச் சிவமாகும் வித்தையைக் கற்பிக்கிறார். சோதியாகிய பிரமம் நீ என்கிறார். சோதிச் சுழுமுனை தில்லைப் பதிநகர் என்பது ஞானவெட்டி. மும்முதலாம் முச்சந்தி முனையே லிங்கம் என்பது கோரக்கர் வாக்கு. இஃது ஆத்மலிங்கம்; அங்கலிங்க ஐக்கியம் சங்கமிக்கும் இடம். சாகாக் கல்வி கற்று சாகாவரம் பெற்ற சதுரர்; சுத்த சன்மார்க்க முதல்வர்; அமலர்; விமலர்; நம்மவர்; நமக்கு உற்றமொழி உரைப்பவர். மனக்கதவு திறந்து உள்ளானை வாய்மை கொண்டு அழைக்கிறார்! இனத்தொடு நேர்மை கொண்டு அழைக்கிறார்! குணத்தொடு தூய்மை கொண்டு அழைக்கிறார் வாருங்கள்! வாருங்கள்!*

**திருச்சிற்றம்பலம்**



## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்



*அனபு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.*

*இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.*

*சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.*

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

# மூத்தோர்சொல் அமிர்தம்

பயம் கண்ணை மறைக்கும்!! சிறுவன் ஒருவன் காட்டில் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது மரத்தில் கண்ணை பறிக்கும் வகையில் பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அதனால் அவன் அதனை பறிக்க அந்த மரத்தின் மீது ஏறி கிளையில் நகர்ந்து சென்றான். ஆனால் அந்த கிளையோ அவனது பாரம் தாங்காமல் முறிய இருந்தது. அதனால் அவன் மற்றொரு கிளைக்கு நகர்ந்தான். பின் அவன் பயந்து கொண்டே கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று அழைத்து கொண்டே இருந்தான்.



அப்போது அந்த வழியாக வந்த ஒரு துறவி, அவனைப் பார்த்து, அவனுக்கு உதவ முன் வந்தார். அதனால் அவர் அவன் மீது சிறிய கல்லை விட்டு எறிந்தார். அவனோ கல்லை எறிந்ததும் அவர் மீது கடும் சினங்கொண்டு, முயற்சி செய்து கீழே இறங்கி வந்தான். பின் அந்த துறவியைக் கண்டு கோபத்துடன் சரமாரியாகத் திட்டினான். பிறகு அவரிடம் "நான் உங்களிடம் உதவி தானே கேட்டேன், ஏன் அப்படி செய்தீர்கள்?" என்று கேட்டான். அதற்கு அந்த துறவி "நான் உனக்கு உதவி தான் செய்தேன்" என்று சொன்னார். அவனோ திருதிருவென முழித்தான்.

பின்னர் அந்த துறவி அவனிடம் விளக்கினார். "நான் உன்னை பார்த்த போது உன் பயத்தில் உன் மூளை வேலை செய்யவில்லை. ஆகவே நான் உன் மூளைக்கு வேலை கொடுப்பதற்கு, கல்லை எறிந்தேன். நான் எறிந்ததும், நீ யோசிக்க ஆரம்பித்து, கீழே இறங்கிவிட்டாய். உன் பயத்தை போக்கவே நான் அவ்வாறு செய்தேன்" என்று கூறி சென்று விட்டார்.

**பயம் என்பது, தேக முதலியகருவிகளுக்கு நட்டஞ் செய்வதாகிய விடயங்கள் நேரிட்டபோது கரணங்களுக்கும் அறிவுக்கும் உண்டாகின்ற நடுக்கம்.**

*முன்னேற நிறைய வழிகள் உண்டு!!! ஒரு கிராமத்தில் புத்திசாலியான ஜென் துறவி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் எந்த ஒரு பிரச்சினையையும் எளிதில் தீர்த்துவிடும் தன்மை உடையவர். ஆகவே அந்த கிராமத்தில் உள்ள மக்கள் தங்களுக்கு ஏதேனும் பிரச்சனை என்றால் அவரிடம் சொல்லி சரிசெய்து கொள்வர்.*



*அந்த கிராமத்தில் உள்ள மக்கள் தங்களுக்கு வேண்டிய பொருட்களை அருகில் உள்ள சந்தைக்கு சென்று வாங்குவது வழக்கம். சந்தை என்றாலே சற்று தூரமாக, சிறு சிறு தெருக்களை தாண்டி தான் செல்ல வேண்டியிருக்கும். மேலும் வாரத்தில் “சந்தை நாள்” என்று ஒரு நாள் இருக்கும். அந்த நாளில் அனைத்து பொருட்களும் கிடைக்கும். ஆகவே மக்கள் கூட்டம் கூட்டமாக சந்தைக்கு சென்று கொண்டிருந்தனர்.*

*அந்த கூட்டம் சிறு தெருக்கள் வரை நீண்டு நின்றிருந்தது. அதிலும் மக்கள் சந்தைக்கு செல்லும் போது எப்போதும் ஒரே தெருவின் வழியாகத் தான் செல்வார்கள். அன்று அந்த தெருவின் முனையில் ஒரு முரட்டுக்குதிரை இருந்தது. மக்கள் சந்தைக்கு செல்ல வேண்டுமென்றால், அந்த குதிரையைக் கடந்து தான் செல்ல வேண்டியிருந்தது. அதன் பக்கத்தில் செல்லும்போது, அதனுடைய முரட்டுத்தனத்தை பார்த்து, பயந்து அவ்விடத்திலேயே மக்கள் கூட்டம் தேங்கி எவ்வாறு குதிரையை அகற்றுவது என்று யோசித்துக் கொண்டிருந்தனர்.*

*அந்த நேரத்தில் ஜென் துறவியும் சந்தைக்கு வந்துகொண்டிருந்தார். அவரைப் பார்த்த மக்கள், அவரிடம் தங்கள் பிரச்சனையை சொன்னார்கள். துறவி “அப்படியா?” என்று சொன்ன படியே, வந்த வழியாக திரும்பிச் சென்று, மற்றொரு தெருவின் வழியாக சந்தையை அடைந்தார்.*

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். – குறள் 673

**இயலுமிடத்தில் எல்லாம் செயலைச் செய்து முடித்தல் நல்லது, இயலாவில்லையானால் பயன்படும் இடம் நோக்கியாவது செய்ய வேண்டும்.**

**திருச்சிற்றம்பலம்**

# தெரிந்து தெளிதல்

**பார்த்தவை எதையும் நாம் நம்புகிறோம். கடவுளைப் பார்க்க முடியவில்லையே? எப்படி நம்புவது? கடவுளை நேராகப் பார்த்தவர்கள் இருக்கிறார்களா? அவர்கள் சொல்லுவது என்ன?**

*கடவுளை நேராகப் பார்த்தவர்கள் இவ்வுலகில் இருந்தார்கள். இன்னும் இருக்கிறார்கள். இராமலிங்க சுவாமி கூறுகிறார். "யாருக்கும் எட்டானை, என் அளவில் எட்டினானை, எம்மானைக் கண்டும் களித்தும் இருக்கிறேன்" என்கிறார்.*

*நமக்கு முடியவில்லை என்றால் தப்பு என்று சொல்ல முடியுமா? இங்கிருந்து கொண்டு சென்னையைப் பார்க்க முடியுமா? ஆகவே அது கிடையாது என்று சொல்லி விடலாமா? சூட்சுமமான பொருளைக் கண்ணால் பார்க்க முடியாது. அதனால் காப்பியில் சீனியைப் பார்க்க முடியாது. அதற்காக சீனி இல்லை என்று சொல்லி விடலாமா? பூதக்கண்ணாடி போட்டு பார்த்தும் தெரியவில்லை என்று சொல்லலாமா? அனுபவப் பொருட்களை அனுபவித்துத்தான் உணர வேண்டும். சிலர் சொல்லுகிறார்கள் "கடவுள் இருக்கிறாரா? கண்ணுக்கு தெரியவில்லையே?" என்று. அது சரியாகுமா? பம்பரம் தானே ஆடுமா? அல்லது ஆட்டினால் ஆடுமா? தாயுமானவர் கூறுகிறார்.*

**"சாட்டை இல்லாப் பம்பரம்போல் ஆடும் சடசால**
**நாட்டமற வெந்தை சுத்த ஞானவெளி காண்பேனா?"**

*என்று. பம்பரத்தைச் சாட்டை வைத்து ஆட்டுகிறான் இளைஞன். சாட்டை இல்லாமலே ஆட்டுகிறான் இறைவன். சில தாய்மார்கள் கண்ணாடி இல்லாமலே தலை சீவுகிறார்கள்... பழகிவிட்டால் வந்துவிடும். நாம் சாட்டையை வைத்துப் பம்பரம் ஆடுகிறோம். ஆண்டவன் தானே ஆட்டுகிறான். அப்போது ஆட்டுவான் இன்றி ஒன்றும் ஆடாது என்பது தெளிவு. ஒரு கட்டடத்தைப் பார்க்கிறோம். இஞ்சினீயர் இப்போது இல்லை. எப்படி முளைத்திருக்கும்? தானாக வந்தது என்று சொல்லலாமா? நெய்வானின்றித் துணி உண்டா? கட்டுவான் இன்றி மாலை உண்டா? செய்வானின்றி நகை உண்டா? தங்கம் ஒன்று இருக்கிறது, அதிலிருந்து நகையை வடிவமைக்கிறான் பொற்கொள்ளன். அதுபோல உலகிற்கு முதல் காரணமாக இருப்பது மாயை. துணைக் காரணமாக இருப்பது சக்தி. நிமித்த காரணமாக இருப்பது சிவம். ஒரு பானைக்கு முதல் காரணம் மண். நிமித்த காரணம் குயவனார். துணைக் காரணம் தண்டச்சக்கரம். பானை செய்யும்போது பார்க்கலாம். இதுபோல, சக்தியாக*

*இருக்கின்ற துணைக் காரணத்தைக் கொண்டு நிமித்த காரணமாக இருக்கின்ற சிவபெருமான், இந்த உடலாகிய பானையை வனைகின்றான் என்பது சாஸ்திரம். ஆகப் பானையைப் பார்த்ததும் அதைச் செய்த குயவன் நினைவுக்குக் வருகிறான் என்பதுபோல, உலகைப் பார்த்தவுடன் அதைப் படைத்த இறைவன் நினைவுக்கு வருகிறான்.*

**பக்தி மார்க்கத்துக்கு ஒழுக்கம் அவசியம் என்று கூறுவதன் பொருள் என்ன? அடியார்கள் பலர் இளமையில் ஒழுக்கம் இன்றித் திரிந்து, பிறகு பெரிய பக்திமான்களாக ஆகி உயர்வு பெற்றதாக வரலாறுகள் உள்ளனவே?**

*நல்ல மழை பெய்துகொண்டிருக்கிறது. ஓர் எண்பது வயதுப் பாட்டி தன் பேத்தியிடம் தண்ணீர் பிடித்து வைக்கச் சொல்லுகிறாள். பேத்தி பாத்திரங்கள் சிலவற்றை மழையில் கொண்டு போய் வைக்கிறாள். மழை நின்ற பிறகு போய்ப் பார்த்தால் எந்தப் பாத்திரத்திலும் தண்ணீர் இல்லை. ஊர் முழுக்கத் தண்ணீர் இருக்கிறது. ஆனால் பேத்தி வைத்த பாத்திரங்களில் தண்ணீர் இல்லை. ஏனென்றால் அவள் அந்தப் பாத்திரங்களைக் கவிழ்த்து வைத்திருந்ததுதான். எதற்கும் ஓர் ஒழுங்கு வேண்டும். அதையே ஒழுக்கம் என்று கூறுகிறோம். ஒழுங்காக வைக்காத பாத்திரத்தில் தண்ணீர் சேராது. ஒழுக்கம் இல்லாதவர்களுடைய உள்ளத்தில் கடவுள் பக்தி சேராது. ஒழுக்கம் தானாக வருவதில்லை, வழிவழியாக படிப்படியாக வருகிறது. நாமும் அவற்றை விதித்துக் கொண்டு கட்டுப்பாட்டுடன் வாழ வேண்டும். ஒழுக்கம் இருந்தால்தான் நாம் உயரலாம். எதற்காகக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள்? மகப்பேற்றுக்காக என்றால் ஒரு பெண் கல்யாணம் ஆகாமலேயே ஒரு பையனை எடுத்து வளர்க்கலாம்; குடித்தனம் நடத்தலாம். கல்யாணம் அவளுடைய ஒழுக்கத்தை வரம்பு கட்டி வளர்க்கிறது என்பதுதான் முக்கியம்.*

*பதினைந்து ஆண்டுகள் கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகி, அவன் மாதவியிடமிருந்து திரும்பி வந்ததும் அழுகிறாள். காரணம் என்ன? "பொன் போய் விட்டதே? பொருள் போய் விட்டதே? என்னுடைய இளமை எல்லாம் போய்விட்டதே?" என்றா அழுகிறாள்? அதுதான் இல்லை. "இத்தனை நாள் நீங்கள் இல்லாமல் முறைப்படி தாம்பத்தியம் செய்வதன் மூலம் விருந்தாளிகளை உபசரிக்கும் விருந்தோம்பல போய்விட்டதே?" என்றுதான் அழுகிறாள். ஒழுக்கம் விலைமதிப்பரிய செல்வம். அதை வைத்துத்தான் பிற பண்புகளை வளர்க்க வேண்டும். ஒரு வீட்டை, ஒரு காரை விலை கொடுத்து வாங்கிவிடலாம். ஒழுக்கத்தை விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. தானாகவே வரவேண்டிய பண்பு அது.*

ஒருவருக்கு நல்ல ஒழுக்கம் கிடைக்க வேண்டும் என்பதுதான் முதல். நல்ல அறிவு வரவேண்டும் என்பது அப்புறம்தான். ஒழுக்கத்தில் உயருவதற்கு ஓயாமல் ஒருவர் முயன்று கொண்டே இருக்க வேண்டும். இறைவனிடம் மனம் உருகிக் பிராத்தனை செய்யும்போது, அந்த மனம் தூய்மையானதாக இருக்க வேண்டும். ஒழுக்கத்தில் நிலை பெற்றால் மட்டுமே ஒருவர் ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற முடியும்.

**சமாராதனை என்பது என்ன? நிதம் ஏன் அதைச் செய்கிறோம்? அதனால் என்ன பலன் கிடைக்கும்?**

*சம் – நல்ல, ஆராதனை – வழிபாடு. இறைவனுக்குச் செய்வது வெறும் ஆராதனை. ஏழைகட்குச் செய்வது சம்+ஆராதனை – சமாராதனை. இறைவனுக்குச் செய்வதைப் பார்க்கினும், ஏழைகட்குச் செய்வதுதான் சிறந்தது. ஏன்?*

*இறைவனுக்கு நிவேதித்த சர்க்கரைப் பொங்கல் ஏழைக்கு வராது. ஏழைகளுக்கு இட்ட சர்க்கரைப் பொங்கல் ஏழைகளின் உள்ளத்தில் இருக்கிற இறைவனுக்குப் போய்ச் சேரும்.*

*இந்தக் கருத்தை நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் கூறுகின்றார்.*

**"படமாடக் கோயில் பரமர்க கொன்றீயின்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா**
**நடமாடக்கோயில் நம்பர்க் கொன்றீயின்**
**படமாடக் கோயில் பரமர்க்கங்காமே"**

*இதற்கு ஓர் உதாரணம் கூறுகிறேன். தபால்களை நேரே தலைமைத் தபால் நிலையத்தில் சேர்த்தால் வீதிகளில் உள்ள தபால் பெட்டிகளுக்கு வரமாட்டா, ஆனால் வீதிகளில் உள்ள தபால் பெட்டியில் இட்ட தபால்கள் தலைமை அஞ்சல் நிலையத்துக்கு வரும் அல்லவா?*

*தலைமை அஞ்சல் நிலையம் கோயிலில் உள்ள இறைவன். தபால் பெட்டிகள் ஏழை எளியவர்கள். ஆதலால் இறைவனுக்குச் செய்யப்படும் வழிபாட்டைப் பார்க்கினும், ஏழைகளுக்குச் செய்யும் தொண்டுகளின் மூலம் இறைவனைச் சென்று அடையும் வழிபாடே சிறந்தது.*

*ஆகவேதான் சுவாமிக்குச் செய்வது ஆராதனை எனப்படும். ஏழைகட்குச் செய்வது சமாராதனை எனப்படும்.*

**என்னிடம் பல நன்மைகளைப் பெற்ற ஒருவர் எனக்குத் துரோகம் செய்கிறார். என்னைத் துன்புறுத்துகிறார். நான் இதனால் நொந்து போயுள்ளேன். நன்மைகளையே செய்த எனக்கு ஏன் இப்படி நேரவேண்டும்?**

*இராமாயண காவியத்தில் சீதாதேவியைப் பலவாறாகவும் கொடுமைப்படுத்திய கொடிய அரக்கிகளை, இராவண வதம் முடிந்தபிறகு வந்து, தேவியைத் தரிசித்த ஆஞ்சநேயர், எரியிலிட்டு கொளுத்திவிட அனுமதி கேட்டார். மற்றவர்களாயின் "நல்லது, மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்து" என்று கூறி இருப்பார்கள். ஆனால் பரம ஞானியான ஜனகர் பெற்ற அந்த சீதாதேவி, அப்போது என்ன கூறினாள்?*

*அப்பா அனுமானே! இந்த அரக்கியர் என்னைத் துன்புறுத்தவில்லை நான் துன்பத்தை அனுபவிப்பதற்குக் காரணம் இவர்கள் அல்லர். என் விதிதான் காரணம். தவநெறியில் நின்ற என் கணவரை "மானைப் பிடித்துக் கொடுங்கள்" என்று மானுக்குப் பின்னால் அனுப்பினேன். அது பிழை அல்லவா? அவர் எனக்குக் காவலாக வைத்துவிட்டுப் போன இலக்குவனை நிந்தனை செய்து நான் அவர் பின்னே போகச் செய்தேன். என் அருகே இலக்குவன் இருந்திருந்தால் ஈராயிரம் இராவணர்கள் வந்திருந்தாலும் என்னைக் கவர்ந்து சென்றிருக்க முடியாது.*

*உணவும் உறக்கமும் துறந்து, சுகத்தை மறந்து என்னைக் காத்து நின்ற பரம பக்தனை – இலக்குவனை, எனது கடுஞ்சொற்களால் மனம் நோகச் செய்து அனுப்பினேன். அந்த வினைப் பயனால் இந்த இடர் வந்தது.*

*"செய்வான்; செய்வினை; வினைப்பயன்; சேர்ப்பான் என்ற இந்த நான்கு தன்மைகளை உணர்வதுவே உத்தம ஞானம். இராவணனின் ஏவலர்களாகிய இந்த அரக்கியர் தமது எஜமானர் இட்ட கட்டளைப்படி என்னை இடர்ப் படுத்தினார்கள். ஆதலால் அவர்களை நோவலாமா? என்னுடைய இல்லத்திலிருந்த என்னுடைய உடையை உடுத்து, என்னுடைய உணவை உண்ட கூனி எனக்குப் பெருந்துயர் விளைவித்தாள். அதனையே நான் பொறுத்து மன்னித்து விட்டேன். அந்தக் கூனியைவிட இந்த அரக்கியர்கள் கொடியவர்களா? இல்லையே?"*

*ஆதலால் துன்பத்தை நுகர்கிறவர்கள் கடவுளையோ மற்றவர்களையோ நோவக்கூடாது. நம்முடைய வினையைத்தான் உணர்ந்து, அதன் பயனை அனுபவித்தாக வேண்டும்.*

*துன்பம் வினையினால் விளைகின்றன. விதை இல்லையேல் செடி கொடிகள் இல்லை. பால் இல்லையேல் நெய் இல்லை. இதுபோல வினை இல்லையேல் துன்பம் இல்லை. துன்பங்களுக்கருகில் இருக்கும்போது அதற்குக் காரணங்கள் வினைகள்தாம் என்பதை உணர்ந்து அந்த அனுபவத்தால் நம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும்.*

**திருச்சிற்றம்பலம்**

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**வாடுதல் நீக்கிய மணிமன்று இடையே 101**
**ஆடுதல் வல்ல அருட்பெருஞ்ஜோதி 102**

*வாடுதல் - வாட்டம் உறுதல்*

*வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார் இங்கே வாட்டத்தை நீக்கும் மணிமன்றைக் கூறினார். மணிமன்று - இரத்தின சபை. மணி - இரத்தினம். மன்று - சபை. ஐந்து சபைகளுள் ஒன்றான இரத்தின சபை திருவாலங் காட்டில் உள்ளது.*

*சிதம்பரத்தில் சிற்சபை, பொன்னம்பலம், கனகசபை,*
*மதுரையில் வெள்ளியம்பலம்,*
*திருநெல்வேலியில் தாமிரசபை, செப்பறை*
*குற்றாலத்தில் சித்திரசபை,*
*திருவாலங்காட்டில் இரத்தினசபை.*

*பொன், வெள்ளி, தாமிரம் (செம்பு) ஆகிய முப்பெரும் உலோகங்களால் மூன்று சபைகள் அமைந்தன. ஓவியமன்றம் ஒன்று (சித்திரசபை). மணியம்பலம் ஒன்று (இரத்தினசபை). பஞ்சபூதத்தலங்களின் அமைப்பும், ஐம்பெருஞ்சபைகளின் அமைப்பும் தமிழகத்துக்கே உரிய தனிச்சிறப்பு. தமிழர் கண்டுபிடிப்பு.*

*காவிரி நீர் பொன்சத்துடையது. வைகை நீர் வெள்ளிச் சத்துடையது. தாமிரவருணி நீர் தாமிரச்சத்துடையது. காவிரிக்குப் பொன்னி ஆறு என்றும் ஒரு பெயர். காவிரி பாயும் நாடு பொன்னிநாடு. அந்நாட்டுமன்னன் பொன்னிவளவன். பொன்வளம் பொருந்திய பொன்னியாற்றுத் தீரத்தில் பொன்சபையைக் கண்டனர் பழந்தமிழ் அறிவர். வெள்ளிவளம் பொருந்திய வைகையாற்றங்கரையில் வெள்ளியம்பலத்தை நிறுவினர். தாமிரவளம் பொருந்திய மண்ணும் நீரும் உடைய தாமிர வருணிக்கரையில் தாமிர சபையை நிறுவினர். இயற்கைவளம் சிறந்த குற்றாலத்தில் இறைவனை உயிரோவியமாகக் கண்டனர்; சித்திரசபை, பாலாற்றுப் பகுதியில், மணிக்கற்கள் கிடைக்கும் திருவாலங்காட்டில் இரத்தின சபையை அமைந்தனர். (இலங்கையில் இரத்தினக்கற்கள் கிடைக்கும் மலைநிலப்பகுதி ஒன்றுக்கு இரத்தினபுரி என்றே பெயர்)*

*உலோகங்கள் கனிமங்கள் (*Metals, Minerals*) பற்றிய அறிவில் முன்னாளைய அறிவர்கள் இந்நாளைய அறிவியலாரையும் விஞ்சுபவராய் விளங்கினர் என்பதற்குப் பஞ்சசபை அமைப்பு,*

பஞ்சபூதத் தல அமைப்பு ஆகியவை மட்டும் போதுமே! மினரல் வாட்டர் Mineral Water இந்நாளைய கண்டுபிடிப்பு எனின் ஐம்பொருஞ்சபைத் தலங்களின் கனிம நீர்வளம் அந்நாளைய அறிஞர்களின் கண்டுபிடிப்பு.

திருவாலங்காட்டுக்கு இரத்தின சபை (மணி மன்றம்) என்பது பெயர் என்றாலும், இங்கே அகவலில் வாடுதல் நீக்கிய மணிமன்று எனக் குறிப்பிடப்பெறுவது சிதம்பர சிற்சபையே. மணிமன்றம் என்றும் சிதம்பர சிற்சபை குறிப்பிடப்பெறும். மணிமன்றவாணர் என்று நடராசர் குறிப்பிடப் பெறுவார்.

தில்லைச்சிதம்பர மணிமன்றில் உள்ள நடராசர் ஆடுதல் வல்லவர் (ஆடவல்லான்). ஆடுவதில் வல்ல அவர் உயிர்கள் வாடுவதை நீக்குவதிலும் வல்லவர்.

புருவமத்தியே சிற்றம்பலம், அங்குள்ள ஆன்மப் பிரகாசமே சபை. அவ்ஆன்மப்பிரகாசத்துள் விளங்கும் அருட்பிரகாசமே அருட்பெருஞ்ஜோதி. அதன் அசைவே நடனம் என்பது வள்ளற் பெருமான் உபதேசம்.

பூர்வஞானசிதம்பரமாகிய தில்லையில் சிற்சபையில் நடராசர். உத்தரஞான சிதம்பரமாகிய வடலூரில் சத்தியஞான சபையில் அருட்பெருஞ்ஜோதி. நடராசபதிமாலையில் “அருட்பெருஞ்ஜோதி நடராசபதியே” என இருவரையும் ஒருவராகவே கூறுகிறார் வள்ளற்பெருமான்.

சிதம்பர சிற்சபையின் விரிவாக்கமே வடலூர் சத்திய ஞானசபை. எனவே மணிமன்று என்பது சத்தியஞான சபைக்கும் பொருந்தும். சத்தியஞானசபையில் ஆடுதல்வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை வழிபட்டால் அவர் நம் வாடுதலை நீக்கியருள்வார்.

**நாடகத் திருச்செயல் நவிற்றிடும் ஒருபேர் 103**
**ஆடகப் பொதுஒளிர் அருட்பெருஞ்ஜோதி 104**

நாடகம் – நடனம்

இயல், இசை, நாடகம் எனத் தமிழை முத்தமிழாகப் பிரித்தனர் பழந்தமிழ்ப் புலவர்கள். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ். இயல் – உரை, இசை – பாட்டு, நாடகம் – ஆட்டம். பாட்டுப்பாடுதல் இசை, ஆட்டமாடுதல் நாடகம். ஆடற் கலையே அந்நாளில் நாடகம் எனப்பட்டது. பின்னாளில் நடிப்புக்கலை நாடகம் எனப் பெயர் பெற்றது. என்ற ஆங்கிலப் பெயர்களால் இதனை நன்கறியலாம். “டான்ஸ்” – நடனம், நாட்டியம், கூத்து. “டிராமா” – நாடகம். நடனத்திற்கு ராஜன் நடராஜன். கூத்தப்பெருமான் என்பதும் அவன்

*பெயர். நடராஜப்பெருமான் ஆடுவது நடனம், நாடகம், கூத்து.*

*முன் அடியில் "ஆடுதல் வல்ல அருட்பெருஞ்ஜோதி" என்றார். இங்கே "நாடகத் திருச்செயல் நவிற்றிடும்" என்கிறார். நாடகத் திருச்செயல், திருநடனம். இறைவனின் நடனம் ஆனந்தநடனம். அதனை "ஆனந்தநாடகம்" என்பார் நம் வள்ளற்பெருமான்.*

**ஐயர் திருச்சபை ஆடகமே**
**ஆடுதல் ஆனந்த நாடகமே 5080**
**ஆனந்த நாடகம் கண்டோமே – பர**
**மானந்த போனகம் கொண்டோமே 5084**

*என்பன பெருமான்வாக்கு. ஆடகமும் நாடகமும் இங்கும் வந்தன.*

*ஆடகப்பொது – பொற்சபை; பொன்னம்பலம்*

*ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என நான்கு வகைப் பொன் உண்டு.*

**"சாதரூபங் கிளிச்சிறை யாடகம்**
**சாம்பூ நதமென வோங்கிய கொள்கையிற்**
**பொலந்தெரி மாக்கள் கலங்கஞ ரொழித்தாங்**
**கிலங்கு கொடி யெடுக்கு நலங்கிளர் வீதியும்"**

*என்பது சிலப்பதிகாரம், 14 ஊர்காண்காதை, பொன்வணிகர் வீதியின் வருணனை. நால்வகைப் பொன்னிலும் ஆடகம் (ஆடகப்பொன்) தரம் உயர்ந்தது, மாற்றுயர்ந்தது.*

*சிதம்பரப் பொற்சபை ஆடகப் பொன்னால் ஆனது. "ஆடகப் பொற்சபை நடுவே நாடகம் செய்தருளும் அம்மே! என் அப்பா! என் ஐயா! என் அரசே!" என்பது பெருமான் வாக்கு (4642). இவ்விடத்தும் ஆடகமும் நாடகமும் வந்தன.*

*திருவனந்தபுரம் கோயிலுக்கு "ஆடக மாடம்" என்று பெயர். "ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன்", "ஆடக மாடத்து அரவணைக் கிடந்தோன்'' என்பன சிலப்பதிகாரம் (26 கால்கோட்காதை 62; 30 வரந்தருகாதை 51).*

*நாடகத் திருச்செயல் நவிற்றிடும் – நடனமாடும் திருச்செயலைப்புரியும்; ஒருபேர் ஆடகப்பொது – ஒப்பற்ற சிறந்த ஆடகப்பொன்னால் ஆன சபையில்; ஒளிர் அருட்பெருஞ்ஜோதி – ஒளிருகின்ற (ஒளிவீசுகின்ற) அருட்பெருஞ்ஜோதி!*

*ஆடகப்பொதுவில் (தில்லைப் பொன்னம்பலத்தில், வடலூர் சத்திய ஞானசபையில்) நாடகத்திருச்செயல் நவிற்றிடும் ஆனந்தநடனம் ஆடியருளும், ஆடியருளி ஒளிரும், அருட்பெருஞ்ஜோதியே! என்றவாறு.*

**Advertisement**


## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

BNS

Wings of Wisdom

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.


# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



## Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 | VALASARAVAKKAM 42105700 | PORUR 42107304 | OMR 42863478 | VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# சங்கம் சாலை சபை

அவதார புருடரென்றும் யுக புருடரென்றும் சன்மார்க்க அறிஞர்களால் போற்றப்படுகிறவரும் துதிக்கப்படுகிறவரும் ஒப்பாரும் மிக்காருமின்றி ஓதாது உணர்ந்தவருமாகிய நம் வள்ளல் பெருமானார், அவர்தம் வாழ்க்கையில் குழந்தை பருவம் முதல் வாலிப பருவம் வரை இறைவன் அவருக்கு அளித்த காட்சிகளையும், அனுபவங்களையும் நடந்தேறிய அற்புதங்களையும் திருவருட்பாவினுள்ள பாசுரங்களிலும் உரைநடைப் பகுதியிலுள்ள விண்ணப்பங்களின் வாயிலாகவும் அறியலாம்.

இவ்வுலகத்திலுள்ள ஜீவர்கள் யாவரும் இம்மை மறுமைகளிலிருந்து விடுபட்டு இறைபேரின்பத்தை பெற்று ஓங்கும் நோக்குடன் **சன்மார்க்க பெருநெறி ஒழுக்கம்** என்னும் ஞான மார்க்கத்தினை வகுத்தருளினார்.

சன்மார்க்க பெருநெறி ஒழுக்கத்தினை சங்கம், சாலை மற்றும் சபை ஆகியவற்றை நிறுவி அவற்றின் மூலம் தமது சன்மார்க்க கொள்கைகளை எங்ஙனம் உபதேசிக்க செய்தார் என்பதை காணலாம்.

<u>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் (1865)</u>

வள்ளல் பெருமான் சன்மார்க்க பெருநெறி ஒழுக்கத்தினை உயிர்க்குலத்திற்கு உபதேசிக்க முதலில் **'ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்'** எனபதை ஏற்படுத்தினார். ஷடாந்த சுத்த சன்மார்க்கம் என்பது வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆகிய ஆறு அந்தங்களை கொண்டதாகும்.

அந்தங்கள் என்பன முடிபு என்று பொருள்படும். சமயமத சன்மார்க்கம் யாதெனில் சமய மதங்களிலுள்ள அந்தங்கள் ஆறின் சமரசம். மேலும் அவர் சமய மத சன்மார்க்கத்திற்கு அளித்துள்ள விளக்கத்தில் சத்துவ குணங்களும் ஜீவகாருண்ய ஒழுக்கங்களும் மிக முக்கியமானதாக பின்பற்ற கூடியதாக உள்ளதை காண முடிகின்றது.

இதற்கு அடுத்தார் போல், **சமரச வேத சன்மார்க்கம்** என பெயர் மாற்றினார்.

**சரியை**நிலை நான்கும்ஒரு **கிரியை**நிலை நான்கும்
தனி**யோக** நிலைநான்கும் தனித்தனி கண்டறிந்தேன்
உரியசிவ **ஞான**நிலை நான்கும்அருள் ஒளியால்
ஒன்றொன்றா அறிந்தேன்மேல் உண்மைநிலை பெற்றேன்
அரியசிவ **சித்தாந்த வேதாந்த** முதலாம்

*__ஆறந்த__ நிலைஅறிந்தேன் அப்பால் நின்றோங்கும்*
*பெரியசிவ அனுபவத்தால் __சமரச சன்மார்க்கம்__*
*பெற்றேன் இங்கிறவாமை உற்றேன்காண் தோழி.*

*மேற்கண்ட திருவருட்பா பாசுரத்தில் பெருமானார், ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கத்திலிருந்தும், சமரச வேத சன்மார்க்கத்திலிருந்தும், தமது அனுபவ நிலை கொண்டு நித்திய மார்க்கமாகிய சமரச சன்மார்க்கத்தினை எங்ஙனம் நிறுவினார் என்பதை அறிந்து கொள்ள இயலுகிறது. இதற்கும் மேலாக அதீதமாய் சமரச சுத்த சன்மார்க்கத்தை அருளினார்.*

*அவர் அருளிய சன்மார்க்க கொள்கைகள் ஆவன,*

*எங்கும் பூரணராகி விளங்குகின்ற "ஓர் உண்மைக்கடவுள் உண்டென்றும், அவரே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரென்றும், அக்கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்தல் வேண்டும்."*

*அக்கடவுளின் அருள், தயவு என்னும் கருணையால் மட்டுமே கிடைக்கும்.*

*__"கருணை"__ என்பது, எல்லா உயிர்களிடத்தும் தயவும், ஆண்டவரிடத்தில் அன்புமே.*

*எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமையைக் கைக்கொள்ள வேண்டும்.*

*ஜீவகாருணிய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோலாகும். எனவே அதை கடைபிடித்தல் வேண்டும்.*

*சிறு தெய்வ வழிபாடில்லாமலும், அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி செய்யாமலும், புலால் உண்ணாமலும் இருத்தல் வேண்டும்.*

*கருணை விருத்திக்குத் தடையாக இருக்கும் சாதி, சமய, மத ஆசாரங்களை விட்டொழித்து, பொதுநோக்கம் வருதல் வேண்டும்.*

*உண்மையுரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்கு உபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களைப் பெறுதல் வேண்டும்.*

*உண்மைக்கடவுளின் நிலையறிய, மனம் யாதொன்றிலும் பற்றாமல், ஒழுக்கம் நிரம்பி உள்ளழுந்தல், அதைச் சிந்தித்தல், சிந்தித்தலே விசாரித்தல் வேண்டும். அக அனுபவமே உண்மை.*

*__'பெருங்கருணை'__ – கடவுளின் அருளால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளை நீக்கி __'பேரின்ப பெருவாழ்வை'__ நாம் பெறலாம்.*

*சுத்த சன்மார்க்க பெருநெறி ஒழுக்கத்தினால் பெறப்படுகின்ற*

*புருஷார்த்தங்கள் நான்கு. 1. ஏமசித்தி, 2. சாகாக் கல்வி, 3. தத்துவ நிக்கிரகம் செய்தல், 4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் என்பன.*

*இவற்றை பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் ஆவன, 1. இந்திரிய ஒழுக்கம், 2. கரண ஒழுக்கம், 3. ஜீவ ஒழுக்கம், 4. ஆன்ம ஒழுக்கம் ஆகும்.*

*1) இந்திரிய ஒழுக்கமாவது ஞானேந்திரியங்களையும் கர்மேந்திரியங்களையும் ஒடுக்கவது, மேலும் இஃது அட்டாங்க யோகத்தில் குறிப்பிட்டுள்ள இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், ப்ரத்யாகாரம், தாரணை, தியானம் மற்றும் சமாதி ஆகியவற்றை கடைபிடிப்பதின் சுருக்கமேயாம்; 2) கரண ஒழுக்கமாவது அந்தக்கரணமாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவற்றை சிற்சபையில்(புருவமத்தியில்) ஒடுக்குவது; 3) ஜீவ ஒழுக்கமாவது ஆண் பெண் முதலிய இருபாலரிடமும் எவ்வித எவ்வகை பேதமும் பாராது சமநோக்குடன் பாவிப்பது; 4) ஆன்ம ஒழுக்கமாவது என்பத்து நான்கு லட்சம் யோனி பேதமுள்ள எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் வைத்து, ஆன்மாவே சபையாகவும் அதனுள்ளொளியே கடவுளாய் நிற்பதால் யாதும் நீக்கமறக் கண்டு எவ்விடத்தும் பேதமற்று எல்லாம் தானாக நிற்றல்.*

*இவற்றிற்கான விளக்கங்களை உரைநடைப் பகுதியை கொண்டு தக்க ஆசான் மூலம் விளக்கம் பெற்று கொள்ளலாம்.*

<u>சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமசாலை (1867)</u>



*இவ்வாறு சன்மார்க்க சங்கத்தை நிறுவிய வள்ளல் பெருமானார், உயிர்குலம் பசி தவிர்த்தலாகிய ஜீவகாருண்யத்தை பின்பற்றி ஒழுக தருமசாலையை அமைத்தார். மேலும், தருமசாலையின் திறப்பு விழா அன்று தமது சிந்தனையில் தோன்றி தாமே கைப்பட எழுதிய நூலாம் சுத்த சன்மார்க்கத்தின் வேதமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தை யாவரும் அறிய வெளியிட்டார்.*

*உயிர்குலம் ஓங்க கடவுளின் அருளை பெற உபகார கருவியாம் **'ஜீவகாருண்ய ஒழுக்கத்தை'** பற்றி காண்போம்.*

***"ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பதென்? எனில்***

***ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் என்றறிய வேண்டும்."***

*ஜீவகாருண்யத்தை கொண்டு கடவுள் அருளை எங்ஙனம் பெறக்கூடும் என்பதற்கான விளக்கம் பின்வருமாறு,*

**"அருளென்பது - கடவுள் தயவு, கடவுள் இயற்கை விளக்கம். ஜீவகாருண்யமென்பது - ஜீவர்கள் தயவு, ஜீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம். இதனால் தயவைக் கொண்டு தயவைப் பெறுதலும் விளக்கத்தைக் கொண்டு விளக்கத்தைப் பெறுதலுங் கூடும். வேறொன்றினால் பெறக்கூடாமை அனுபவமாகலின், ஜீவகாருண்யத்தைக் கொண்டு அருளைப் பெறுதல் கூடும். வேறொன்றினாலும் பெறக்கூடாமை நிச்சயம். இதற்கு வேறு பிரமாணம் வேண்டாமென்று அறிய வேண்டும்"**

*ஜீவர்களுக்கு பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை அவற்றால் ஏற்படுகின்ற அபாயங்களை நிவர்த்தி செய்தல் ஜீவகாருண்யம். இதில் பசி தவிர்த்தல், கொலை தவிர்த்தல் இரண்டும் பர ஜீவகாருண்யம் என்றும், மற்றவைகளான தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம் போன்றவற்றை நிவர்த்தி செய்தல் அபர ஜீவகாருண்யம் என்றும் அறிதல் வேண்டும்.*

*உள்ளலேன்* ***உடையார் உண்ணவும் வறியார்***
***உறுபசி உழந்து வெந்துயரால்***
*வள்ளலே* ***நெஞ்சம் வருந்தவும் படுமோ***
*மற்றிதை நினைத்திடுந் தோறும்*
*எள்ளலேன்* ***உள்ளம் எரிகின்ற துடம்பும்***
***எரிகின்ற*** *தென்செய்வேன் அந்தோ*
*கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்*
*குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய். - 5382*

*தருமசாலையில் பெருமானார் பெற்ற அனுபவமானது, அறச்சாலையாகிய சத்திய தருமசாலையை தவச்சாலையாய் கண்டார். வனங்களிலும் குகைகளிலும் சென்று பல வருட காலங்கலாக உடம்பிளைத்து தவஞ்செய்து பெறற்க்கரிய சுத்த உஷ்ணத்தை ஒருநாள் அறச்சாலையாம் தருமசாலையில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தமக்கு அளித்ததாக இயம்பியுள்ளார்.*

*ஆகவேதான் பெருமானார், ஜீவகாருண்யத்தினால் பெறப்படுகின்ற ஆன்ம லாபத்தை அளிக்கின்ற தருமசாலையை உயிர்குலத்திற்காக அமைத்தார்.*

*<u>சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை (1872)</u>*



*வடலூர் பெருவெளியில் உத்திர ஞானசிதம்பரம் என்னும் சத்திய ஞானசபையினை அமைத்ததற்கு நம் வள்ளல் பெருமானார் அளித்துள்ள விளக்கங்கள்*

மிகவும் அரியதாயுள்ளது.

இறைவனது திருகுறிப்பின் படியும் திருவருட் சம்மதத்தின் படியும் சத்திய ஞானசபை என்னும் சங்கம்சார் திருக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான சான்று, சத்திய சிறுவிண்ணப்பத்தில்

**"பூர்வ ஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரமென்று குறிக்கப்படுகின்ற உத்தர ஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங்காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடஞ் செய்வோமென்றும் அது தருணம் மிகவும் அடுத்து சமீபித்த தருணமென்றும் அப்பதியினிடத்தே யாம் அருணடம் புரிதற்கு அடையாளமாக ஓர் ஞானசபை காணுதல் வேண்டுமென்றும் திருவருட் குறிப்பால் அறிவித்தது மன்றி** அருளுருவாகி யெங்களகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாதோர் தடைகளுமின்றி **அத்திருஞான சபையுந் தோன்றி விளங்கச் செய்வித்தருளிய** தேவரீர் பெருங்கருணையைக் கருதுந்தோறும் பெருங்களிப்படை கின்றோம்."

நம் வள்ளல் பெருமானார், தன் உள்ளகத்தே பெற்ற அனுபவமே சத்திய ஞானசபையாகும். எனவேதான் இச்சத்திய ஞானசபையை இயற்கை விளக்கம் என்கின்றார்.

**சத்திய ஞானசபை என்னுள் கண்டனன்**
**சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனன்...**
**திருந்தும்என் உள்ளம் திருக்கோயில் ஞான**
**சித்தி புரம்எனச் சத்தியம் கண்டேன்....**

இறைவனை ஜோதி சொரூபராய் வழிபடுவதற்கு எண்கோன வடிவில் புதியதாய் வடிவமைக்கப்பட்டதே சத்திய ஞானசபை. இதன் தத்துவத்தினை எண்ணற்ற சன்மார்க்க அறிஞர்கள் மெய்ஞான ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் இன்றளவும் ஆய்ந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஞானசபையில் எழுந்தருளியுள்ள அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை தரிசனம் செய்வதற்கு முன்னே வெவ்வேறு நிறங்களில் ஏழு திரைகள் தொங்கவிடப்பட்டுள்ளது. இவ்வண்ணத் திரைகள் யாவும் மனிதருக்குள் உள்ள ஆத்ம தரிசனத்திற்கு தடையாய் யிருக்கின்ற மாயா சத்திகளான தத்துவ படலங்களேயாம்.

இத்திரைகள் பற்றிய முழுவிளக்கங்கள் அருட்பெருஞ்ஜோதி அகவலில் அளித்துள்ளார்.

ஜோதி சொரூபராய் உள்ள அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தரிசனத்தை ஏழு திரைகள் நீக்கி ஒவ்வொரு ஆண்டும் தைப்பூசத் தினத்தன்று கண்டுகளிக்கலாம்.

மேலும், நம் பெருமானாரால் அருளப்பெற்ற திருவருட்பாவில் மரணமிலாப் பெருவாழ்வு எனப்படுகின்ற ஞானசரியையிலுள்ள 28 பாசுரங்களை பாராயணம் செய்தும், தக்க சன்மார்க்க அறிஞர்களிடம் விளக்கம் பெற்றும், அதிலுள்ள நெறியினில் வாழ்ந்தும் ஒவ்வொரு மனிதனும் பேரின்ப சித்தி பெருவாழ்வை பெற்று இன்புறலாம் என்பது திண்ணம்.

நம் வள்ளல் பெருமானார் திருவருட் சம்மதத்தினாலும் அருள் அனுபவத்தினாலும் வடலூரில் அமைத்த சன்மார்க்க சங்கம், சத்திய தருமசாலை, சத்திய ஞானசபை ஆகியவற்றிற்கு நாம் யாவரும் சென்று தரிசனம் செய்வதினால் நம்முடைய உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் மூலமாக பெறப்படுகின்ற நன்மையை காட்டிலும் அனந்தங் கோடி பங்கு நன்மை பெறலாம் என்பது சத்தியம்.

திருச்சிற்றம்பலம்

## பாடலும் பொருளும்

**எல்லாம்தான் உடையதுவாய் எல்லாம்வல் லதுவாய்**
**எல்லாந்தான் ஆனதுவாய் எல்லாந்தான் அலதாய்ச்**
**சொல்லாலும் பொருளாலும் தோன்றும் அறிவாலும்**
**துணிந்தளக்க முடியாததாய் துரியவெளி கடந்த**
**வல்லாளர் அனுபவத்தே அதுஅதுவாய் அவரும்**
**மதித்திடுங்கால் அரியதுவாய்ப் பெரியதுவாய் அணுவும்**
**செல்லாத நிலைகளிலும் செல்லுவதாய் விளங்கும்**
**திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர்.**

**- திருஅருட்பா 3274**

அரும்பதவுரை:

**எல்லாம்** – எல்லா உலகங்களும், எல்லாப் பொருட்களும் மற்றும் எல்லா உயிர்களும்

**தான் உடையதுவாய்** – தனக்கே சொந்தமாக உரிமை கொண்டது; ஏனெனில் அதுவே படைத்தது, காப்பது.

**எல்லாம் வல்லதுவாய்** – எல்லா உலகங்களையும், அவற்றில் உள்ள எல்லா உயிர்களையும், சடப் பொருட்களையும் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களால் ஆளும் தன்மை கொண்டதாய்

**எல்லாம் தான் ஆனதுவாய்** – ஒன்றாக இருந்த கடவுள் பலவாகத்

தான் ஆக விரும்பி, சங்கல்ப மாத்திரத்தில் எல்லாமாக விரிந்து, அவற்றினுள்ளே மெய்ப்பொருளாக விளங்கி, அவற்றை இயக்குபவனாய்

**எல்லாம் தான் அலதாய்** – அவற்றின் அகத்தும், புறத்தும் பொருத்தியிருப்பினும், தன் இயல்பில் கெடாது, தன் தனித்தன்மையைத் தக்க வைத்துக்கொண்டு, பற்றற்று நிற்கும் வேறான நிலைமையும் கொண்டதாய்

**சொல்லாலும்** – வார்த்தைகளாலும், அவ்வார்த்தைகளால் ஆன வேதங்கள், ஆகமங்கள் ஆகியவற்றாலும்

**பொருளாலும்** – (சுருதி, மேலே சொல்லப்பட்டதால்)யுக்தி, காட்சி அளவைகளாலும்

**தோன்றும் அறிவாலும்** – உயிர்களின் உள்ளத்தே அனுபவத்தால் ஏற்படும் மன அறிவு, குறிப்பறிவு, மெய்யறிவு, நுண்மாண் நுழைபுலம் போன்ற எந்தச் செயற்கை அறிவாலும்

**துணிந்து அளக்க முடியாததாய்** – இது இன்னதுதான் என்று வரையறை செய்ய முடியாத அப்பாலைப் பொருளாய்

**துரிய வெளி கடந்த** – விழிப்பு நிலை, உறக்கம், கனவு என்ற மூன்று அவஸ்தைகளைக் கடந்த பர அவஸ்தையான நான்காவது வெளியான துரிய வெளியையும் தம் ஞான உணர்வால் கடந்து ஐந்தாவது அவஸ்தையான துரியாதீத அவஸ்தை முதல் அதற்கு மேல் உள்ள பரநிலைகளை அடைந்த

**வல்லாளர் அனுபவத்தே** – மேலாம் பெருந் தவசிகள், பெரும் ஞானிகள் ஆகியோரின் அகத்தே ஞான அனுபவமாய்

**அதுஅதுவாய்** – துரியாதீதத்தை அடைந்தவர் அதுவே இறைநிலை, முடிவானது என்று கருதுவர். இறைவன் அதற்குமேல் நிலையைக் காட்டினால் ஒழிய தானே தன் முயற்சியால் அவற்றை அறிய முடியாத புதிராய்

**அவரும் மதித்திடுங்கால் அரியதுவாய்** – அத்தகைய மாபெரும் ஞானிகளும் தம் இறை அனுபவத்தை உணரலாமே ஒழிய, அறிவு பூர்வமாக விளக்கவோ, விளங்கிக் கொள்ளவோ முடியாததாய்

**பெரியதுவாய்** – யாரையும் விட, எதையும் விட அளவாலும், அறிவாலும், தன்மையாலும், ஆற்றலாலும் பெரிய பொருளாய்

**அணுவும் செல்லாத** – சிறியதில் சிறிதான அணுக்கூட புக முடியாத இடங்களிலும்

**நிலைகளிலும் செல்லுவதாய்** – வெட்ட வெளிகளிலும், சூன்யத்திலும் கூட இயங்கும் ஆற்றல் கொண்டதாய்

**விளங்கும் திருச்சிற்றம்பலத்தே** – இத்தகைய பேராற்றல்களுடன் திகழும் இறைவன் என்றும் அழியாத ஞான பூரண ஆகாயத்தில்

**தெய்வமொன்றே கண்டீர்** – திருநடம் புரியும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஒருவரே என்று கண்டறியுங்கள்

**கருத்துரை:**

*பத்தாயிரம் கோடி அண்டங்களுக்கும் மேலான அகிலாண்டத்தையும், ஆறு அத்துவாக்களையும் அவற்றில் உள்ள 84 இலட்சம் வகைகளான உயிர்களின் கோடானுகோடி உடல், பொருள், ஆவிகளையும், அவ் உலகங்களில் உள்ள எண்ணிலடங்காத சடப்பொருட்களையும் தனிப்பேர் உடைமையாகக் கொண்டவன் ஆண்டவன் ஒருவனே; ஏனெனில் இவை யாவற்றையும் படைத்தவன்; பிறகு காப்பவன், அருள்பவன், ஈடேற்றுபவன் யாவும் அவனே. ஆகவே அவனே சர்வ சித்தி என்ற சர்வ வல்லமை கொண்டவன். அவனால் இல்லாதது என்று எதுவுமில்லை. எதுவும் செய்யும் அளப்பரிய பேராற்றல் கொண்டவன். அதையும் கருவி, கரணங்களின் உதவி ஏதுமின்றிச் சங்கல்ப மாத்திரத்திலேயே செய்யும் சித்தாற்றல் கொண்டவன்.*

*ஆதியில் தான் ஒருவனே தற்பரமாக இருந்தவன். அகிலமாகவும், உயிர்களாகவும் பரிணமிக்க விரும்பி, வெறும் சங்கல்ப மாத்திரத்திலேயே யாவுமாக விளக்கம் கொண்டான். ஏகம் அநேகம் ஆனது. ஒன்று பல ஆனது. எண்ணிலடங்கா உயிர்களாகவும், பொருட்களாகவும் அவனே மாறி நின்றான். எல்லா உயிர்கட்குள்ளும், எல்லா பொருட்களுக்கு உள்ளும் மெய்ப்பொருளாக உள் நின்று இயக்கிக்கொண்டிருப்பவன் அவனே. ஆனால் அதே நேரத்தில் மலக்குற்றம் உள்ள அவ்வுயிர்கள் மற்றும் சடப்பொருட்களின் தொடர்பால் தன் தூய நிலைக்கு மாசு ஏற்படாதவாறு அவற்றிலிருந்து விலகி வேறு பரிமாணத்தில் நின்று அவற்றிலிருந்து அந்நியமாகிப் பற்றற்ற நிலையிலும் இருக்கும் தனித்த தூய்மை உடையவன்.*

*அவனை மனிதரால் தோற்றிவிக்கப்பட்ட சொற்களாலும், அச்சொற்களைக் கொண்டு தொடுக்கப்படும் வேதாகமங்கள், இதிகாச புராணங்கள், சாத்திரங்கள், தோத்திரங்கள் போன்ற யாவற்றாலும் அளக்க முடியாது. மேலும் மன அறிவாலோ, குறிப்பறிவு, மெய்யறிவு, நுண்மாண் நுழைபுலம் போன்ற எந்த வகைச் செயற்கை அறிவாலும் அவனை அறியவோ, அறிந்து*

விளக்கவோ முடியாது. தர்க்கம், தத்துவம், கணிதம், விஞ்ஞானம், இறையியல் போன்ற எந்தக் கலை அறிவுக்கும் எட்டாத, அப்பாலை வெளியில் உள்ளவன் அவன். இவ்வறிவு நிலைகளெல்லாம் செயற்கை. இறைவனோ இயற்கையிலேயே வாலறிவு என்ற அருள் ஒளி அறிவால் ஆனவன்.

அதே நேரத்தில் அவன் உணர முடியாதவனும் அல்லன். விழிப்பு, உறக்கம், கனவு அவற்றைக் கடந்த ஞான அவஸ்தையான துரியம் என்ற கீழ் நான்கு அவஸ்தைகளைக் கடந்து துரியாதீதம் என்ற ஐந்தாவது அவஸ்தையான சமாதியில் அவனை உணர்ந்து அனுபவிக்க முடியும். சீவ துரியாதீதம், பர துரியம், பாதுரியாதீதம், சிவதுரியம், சிவ துரியாதீதம், சுத்த சிவ துரியம், சுத்த சிவ துரியாதீதம் போன்ற மிகவும் அரிய மேல்நிலை அநுபவங்களில் இறைவனை உணர முடியும்.

ஆனால் அப்படிப்பட்ட மாபெரும் ஞானிகள் கூட அந்த அனுபவத்தை தம் அறிவால் அளந்து கூறத் தலைப்பட்டால் இயலாது. ஏனெனில் துரியாதீதத்தில் கடவுளை உணர்ந்தவர் அந்நிலையே கடைசிநிலை என்று கருதி, அங்கேயே தங்கி, அந்த ஆனந்த நிலையிலேயே மூழ்கிக் கிடப்பர். இறைவனே அவர்களை எழுப்பி, அதற்கும் மேல்நிலை உண்டு என்று காட்டினால் ஒழிய சுயமுயற்சியால் அவர்களால் அம்மேல் வெளிகளை உணர முடியாது.

ஒரே நேரத்தில் யாரையும் விட, எதையும் விட, தான் படைத்த பிரபஞ்சத்தை விட, கோடி, கோடி மடங்குக்கு மேல் பெரிய பிரம்மமாகவும், சிறிதினும் சிறிதான அணுவில் கோடி, கோடியிலும் ஒரு பாகமான இறையாகவும் விளங்கிச் சூன்யத்திலும் இயங்கும் நுட்ப ஆற்றல் கொண்டவனாகவும் ஆண்டவன் விளங்குகின்றான். இத்தகைய மாபெரும் ஆற்றல்களையும், தெய்வீகத் திருக்கல்யாண குணங்கள் யாவற்றையும் ஒருங்கே பெற்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், என்றும் நித்தியமான, பேரெழில் கொண்ட, ஞான முழுமையான உயிருள்ள ஆகாயமான சிற்சபையில் தனித்த ஒருவராகத் திருநடம் புரிவதைக் காண வாருங்கள். அவரைக் கண்டால் மேற்கண்ட எல்லா வல்லமைகளையும் உங்களுக்கும் அருளுவார், வாருங்கள் என்று நம்மை அழைக்கிறார் வள்ளலார்.

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

| | |
|---|---|
| காலை உணவிற்கு | – ரூ.2,500/– |
| மதிய உணவிற்கு | – ரூ.6,500/– |
| இரவு உணவிற்கு | – ரூ.3,500/– |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு | – ரூ.4,000/– |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) | – ரூ.2,500/– |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) | – 15 லிட்டர் |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:**

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

ஆண்டு சந்தா ரூ.120

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். 5 வருட சந்தா ரூ.600/– தொடர்புக்கு: 8012680865

www.vallalarmission.org
vallalartrust@gmail.com
www.facebook.com/vallalarmission
Vallalarmission. Cell no: +91 99427 76351





# கோசாலை



அன்பு உள்ளங்களே!

உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

**பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்**
**கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.**


**தொடர்புக்கு: 8883590659, 9123538685**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly September 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா



அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

**நாள்: 24-09-2017, ஞாயிற்றுக் கிழமை**

**இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,**
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- ஜோதி தியானம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 75020 26565, 99651 50531

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865